بسم الله الرحمن الرحيم

**Friday Sermon / வெள்ளிக்கிழமை குத்து.ஃ.பா**

**25 May 2018 (09 Ramadan 1439 A H)**

## “THE WISDOM & LESSONS OF FASTING”

## “நோன்பு நோற்பின் ஞானம் மற்றும் பாடங்கள்”



### HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவசும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

இந்த அருளுக்குரிய மாதத்திலிருந்து, நாம் பெற்றுக்கொள்ள வேண்டிய ஞானம் மற்றும் பாடங்களைக் குறித்து நாம் உணர வேண்டும். அது மிக முக்கியத்துவம் வாய்ந்த காரியமாகின்றது. அத்தகையில் நாம் காரியங்களை உணர்ந்துக் கொள்வோமேயானால், ரமலானுக்கு பிறகும் அதன் அருட்கொடைகளை நாம் பெற்றுக்கொண்டேயிருப்போம். எல்லா நிலையிலும் அதன் அருளுக்கு நாம்

ஆளாகியவாறே இருப்போம். மிக சிறந்த ஞானமும், பாடமும் அதில் உள்ளன. ஆனால் துரதிர்ஷ்டத்தால் பெரும்பாலான முஸ்லீம்களும் இம்மாதத்திற்கு அதற்குரிய மதிப்பை அளிப்பதில்லை. இம்மாதம் அருள்மிக்கதாகயிருந்தும், அது உடலளவிலாவது, நல்லொழுக்க அளவிலாவது அதாவது ஆன்மீக நிலையிலாவது அல்லது பௌதீக நிலையிலாவது இம்மாதத்திற்கு உகந்த வகையில் அதன் மீது நாம் கவனம் செலுத்த தவறிய நிலையில் உள்ளோம். ஒரு நபிமொழி இத்தருணத்தில் என் நினைவுக்கு வருகிறது **"நீங்கள் நோன்பு நோற்கும் நாளும், நோன்பு நோற்காத நாளும ஒன்றுபோல் அமைய வேண்டும்".**

இதன் பொருளாவது உங்களின் நடத்தை, மனப்பான்ங்கு மற்றும் தோற்ற நிலையானது நோன்பு நோற்கும்போதும், நோன்பு நோற்காத நிலையிலும் ஒன்று போல் அமைய வேண்டும் என்பதாம். நோன்பு நோற்காத நாட்களில் புரியும் தீய செயல்கள் அதாவது டி.வி பார்த்தல், புறங்கூறுதல் ஒற்றுதல், சண்டைபோடுதல், பொய்சத்தியம் செய்தல், அளவிற்கதிகம் பேசுதல், முறைப்படி தொழுகையை கடைபிடிக்காமலிருத்தல், திருக் குர் - ஆனை வாசித்துக் கொள்ளாமலிருத்தல், இறையெண்ணத்திலிருந்து விலகி நிற்தல், கணினி இணைய வலைதளங்களின் மீதும் நாட்டம் கொள்ளுதல் போன்றவைகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஆம், இந்த ரமலான் மாதம், இத்தகைய செயல்களிலிருந்து உங்களுக்கு மீட்ப்பினை அளிக்கட்டும்! நற்செயல்கள் எங்கும் இடம் பெற்று விளங்கட்டும்!. அதுமூலம் அல்லாஹ்விடம் நீங்கள் திருப்தி கொள்ளுங்கள். நீங்கள் நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் திருக் குர் - ஆன் வாசிப்பது மூலமும் மற்று அனைத்து விதமான பிரார்த்தனைகளில் ஈடுபடுவது மூலமும், ஏழைகளுக்கு உதவி செய்வது மூலமும் இறைவன் உங்களிடத்தில் பொருந்திகொள்கின்றான். ஆகவே நீங்கள் உங்களின் நாவை கட்டுப்படுத்துங்கள், வீண் வார்த்தைகளை பேசாமலிருங்கள், பொய் கூறாமலிருங்கள் இவற்றிற்கு மாறாக நீங்கள் இருப்பீர்களானால் உங்களின் நோன்பு நோற்ப்பினை அல்லாஹ் ஒரு பொருட்டாக ஏற்றுக் கொள்வதில்லை.

திருக் குர் - ஆனில் அல்லாஹ் கூறுகிறான், **"ரமலான் மாதம் திருக் குர் - ஆன் அருளப் பெற்ற மாதமாகும். குர் - ஆன் எல்லா மக்களுக்கும் நேர் வழியைத் தெளிவாக்கக் கூடியதும், நன்மை தீமையை பிரித்தறியக் கூடியதும் ஆகும். எனவே உங்களுக்குள் அம்மாதத்தைக் காண்பவர் அதில் நோன்பு நோற்க வேண்டும்".** (2 : 186)

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள். **"இஸ்லாம் என்பது ஐந்து தூண்களால் கட்டப்பட்டுள்ளது. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வின்றி வேறு எவருமில்லை என நம்பிக்கை கொள்ளுங்கள்!. முஹம்மது**

**(ஸல்) அவர்கள் இறைதூதர் என சாட்சியளித்துக் கொள்ளுங்கள்! சக்காத் (தான தர்மம்) வழங்கி கொள்ளுங்கள்! ஹஜ்ஜு செய்துக் கொள்ளுங்கள்! ரமலானில் நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள்!".** (புகாரி,முஸ்லீம்)

ரசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள், **"ரமலான் மாதம் இதோ வந்தடைந்துள்ளது. இம்மாதத்தில் நோன்பு நோற்பை அல்லாஹ் உங்களுக்கு கட்டாயமாக்கிய அருளுக்குரிய மாதமாகும். இம்மாதத்தில் சொர்க்கத்தின் வாசல் திறந்திருக்கும். நரகத்தின் வாசல் மூடப்பட்டிருக்கும். சாத்தான்களை சங்கிலிகளால் கட்டப்பட்டிருக்கும். ஆயிரம் மாதங்களை விட கண்ணியமிக்க ஒரு இரவு இதிலுள்ளன. எனவே எவரேனும் அதன் நன்மையை இழந்து விட்டால் நிச்சயமாக அவர் இழந்தவரே ஆவார்".** (அன்னாயி)

நோன்பு நோற்பு, இறையச்சத்தை பெறுவதற்கு நமக்கு உதவியாகயிருக்கின்றது. திருக் குர் - ஆனில் அல்லாஹ் கூறுகின்றான். **"நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் முன்னோருக்கு நோன்பு கடமையாக்கபட்டது போன்று, உங்களுக்கும் கடமையாக்கப்பட்டுள்ளது. அதனால் நீங்கள் இறையச்சமுள்ளவர் ஆகலாம்".** (2 -184)

பித்னா (குழப்பங்கள்) தோன்றிக் கொள்ளும் போது, "தக்வாவைக் (இறையச்சம்) கொண்டு அதனை அழித்திட வேண்டும். தக்வா என்றால் என்ன? அல்லாஹ்வுக்கு கட்டுபட்டுக் கொள்வதும் அவனுக்கு அஞ்சி வாழ்வதுமாகும். அல்லாஹ்விடமான தக்வா என்பதன் மிக சிறந்த வரையறை இதுவாகும்.

ஒவ்வொரு செயலுக்கும் ஒரு ஆரம்பமும், ஒரு நோக்கமும் இருக்கும். அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கையை வைத்துக் கொள்ளாமல் அச்செயலை நாம் ஆரம்பித்தால், அத்தகைய செயலை நாம் கட்டுபாடுடன் செய்த ஒரு செயலாக பார்க்க இயலாது. நமது ஆசைகளும், நமது பழக்கவழக்கங்களும் நம் செயல்களை கையாளும் வகையில் அமையக்கூடாது. அது மட்டுமன்றி, நம் செயல்கள், எக்காரணத்தை கொண்டும் மரியாதை மற்றும் பாராட்டுதலை பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் அமைக்கக் கூடாது. மாறாக நம் செயல்கள் அல்லாஹ்வின் திருப்தியை பெற்றுக் கொள்ளும் வகையில் அமையவேண்டும். அதற்கான வெகுமதிகளை நாம் அவனிடமிருந்தே பெற்றுக் கொள்ளவும் வேண்டும். நோன்பு நோற்பு என்பது இறையச்சத்தை பெற்றுக் கொள்வதற்காகும். ஏனெனில் நோன்பு நோற்பு பாவங்கள் செய்வதிலிருந்து நம்மை தடுத்துக் கொள்கின்றது. நாம் அறிவில்லாதவர்களாயிருந்த போது பாவங்கள் செய்தோம். அதனால் தான் ரசூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். **"நோன்பு நோற்பு ஒரு கேடயமாகும். ஒரு அடியானை நரகத்தீயில் இருந்து அக்கேடயம் அவரை பாதுகாத்துக் கொள்கிறது".** (அஹமது)

ஒவ்வொரு நாளும் நோன்பு நோற்புக்கு பிறகு நாம் நம்மிடமே கேட்க வேண்டும். இன்றைய நோன்பு நோற்பு மூலம் எனக்கு அல்லாஹ்விடம் அதிகமான பயம் உருவாகியதா? அவனுக்கு அதிகமளவில் கட்டுபடுகின்றவனாக நான் மாறிக் கொண்டேனா? பாவங்களிலிருந்து விலகி நிற்க எனக்கு முடிந்ததா? கட்டுபடாமையிலிருந்து மீட்ப்பினை பெற முடிந்ததா?

இந்த அருளுக்குரிய ரமலான் மாதத்தில், நமக்கு அல்லாஹ்வின் அருகாமையை தேடிக்கொள்வோம். அல்லாஹ்விடம் மேலும் நெருங்கி விடுவோம். கட்டாயமான கடமைகளை செய்வதன் மூலம் நமக்கு அல்லாஹ்வை அடைந்து விடலாம். திருக் குர் - ஆனை வாசித்தும், அதன் அர்த்தத்தைக் குறித்து சிந்தித்து கொண்டு நாம் நமக்காக நன்மைகளை பெருக்குவோம். நமக்கு தொண்டு செய்வோம். அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்துக் கொண்டிருப்போம். பிற மாதங்களை ஒப்பிட்டு, இப்பிரார்த்தனைக்காக அதிக அளவு நேரத்தை நமக்கு ஒதுக்கி வைப்போம். ஏனெனில் அல்லாஹ் இம்மாதத்திற்கு அதிகம் முன்னுரிமை அளித்திருக்கின்றான். அதிகமளவிற்கு அருட்கள் மற்றும் வெகுமதிகளைக் குறித்து அவன் வாக்குறுதியளித்திருக்கிறான். “லைலத்துர் கதிர் நாளில் 100 மாதம் நாம் பெறும் வெகுமதிகளை விட அதிகம் வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கின்றது. எனவே நீங்கள் ஆன்மீக கூட்டங்களில் பங்கேற்று மேலும் முயற்சிகளை மேற்கொள்ளுங்கள். உங்களின் இதயங்களில் இறைவனிடமான நெருக்கம் அதிகமளவில் உருவாகி விடட்டும்! அவனிடமிருந்து மன்னிப்பை பெறுவதற்கும் அவனது இரக்கத்தை அடைவதற்கும் உங்களுக்கு முடிந்து விடட்டும்.

இந்த அருளுக்குரிய மாதத்தில் அல்லாஹ்வுமாக மிக அதிகமளவிற்கு நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான மற்றொரு வழி என்பது, இத்திகாப்பாகும். “இத்திகாப்பை” நமக்காக அவன் விதித்திருக்கின்றான். அல்லாஹ்வைப் பற்றிய எண்ணம் நம் இதயங்களில் நிரம்பி நிற்பதற்காக அவனையே குறிக்கோளாக வைத்து செயல்படுங்கள். உங்கள் நோக்கம் அவனது படைப்பினங்கள் மீதாகக் கூடாது. உங்களின் இதயத்தில் அல்லாஹ் மட்டுமே இடம் பெற்றிருக்க வேண்டும். அல்லாஹ்வின் மீதான அன்பால் இதயம் நிரம்பி வடிய வேண்டும். நாம் அவனை நினைவில் கொண்டிருக்க வேண்டும். அவன்பால் திரும்பிக் கொள்ள வேண்டும். அவ்வாறேயானால் நம் இதயங்களிலுள்ள பயமும் கவலையும் விலகி செல்வதுடன் அவ்விடத்தில் அல்லாஹ் குடிகொள்ளவும் செய்வான். நம் அனைத்து தரப்பட்ட எண்ணமும் அல்லாஹ்வின் மீதாகட்டும். அவனைப் பற்றிய எண்ணத்தால் நம் இதயம் நிரம்பட்டும். அவனிடம் மேலும் நெருக்கத்தை எவ்வாறு ஏற்படுத்திக் கொள்ளலாம் என்பது மட்டுமாகட்டும் நம் எண்ணங்கள். மற்றனைத்தையும் விட மேலாக, நாம் மிக அதிகமான நிலையில் நேசிக்கும் ஒரேயொருவன் அவனே ஆகட்டும்.

நோன்பு நோற்பு, பொறுமையை பெற்றுக் கொள்வதற்கான உதவியை நமக்கு அளிக்கின்றது. திருக் குர் - ஆனில் கிட்டதட்ட 100 இடங்களில் பொறுமையைப் பற்றி கூறப்பட்டுள்ளது. ரமலான் என்பது பொறுமையின் மாதமாகும். நோன்பு நோற்பு என்பது பொறுமையின் இணைபொருட் சொல்லாகும். ஏனெனில் இது உண்ணுதல் அருந்துதல் மற்றும் பாலியல் விருப்பங்கள் போன்ற நம் ஆசைகளுக்கு இடையூர் விளைவிக்கிறது. நோன்பு நோற்பு ஒருவரை சுயம் கட்டுபடுத்திக் கொள்கிறது. அது மூலம் பொறுமையினை பெற்றுக் கொள்வதற்கு முடிகின்றது. பொறுமை எனும் ஆற்றலை பெற்று விட்டால் மிக சிறந்த முறையில் இறைவணக்கத்தில் ஏற்பட்டுகொள்ள நமக்கு முடிகின்றது. அதைப்போன்று பொறுமை நம் வாழ்கைக்கு ஒரு கட்டுபாட்டை அளிக்கின்றது. பொறுமையின் உதவியால் நம் கோபத்தை நமக்கு கட்டுபடுத்த முடிகின்றது. அதுமூலம் நோன்பு நோற்பை நமக்கு இழக்காமல் பாதுகாக்க முடிகின்றது. பொறுமையில்லையென்றால் நோன்பு நோற்பை நாம் இழந்து விடுவோம். எவரேனும் நம் கோபத்தை தூண்டிக் கொள்ள முயற்சித்தால், நாம் பொறுமையை கையாள வேண்டும். பொறுமையிருந்தால் நமக்கு சிறந்த வெகுமதிகளை பெற முடிந்து விடும். இன்ஷா அல்லாஹ்!

இம்மாதத்தில், நாம் கீழ் படிதலின் செயல்களைச் செய்ய உறுதியான தீர்மானத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். ரசூல் (ஸல்) அவர்களின் வார்த்தைக்கு நாம் புத்துயிர் வழங்க வேண்டும். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள், **“பொறுமை, வெற்றியை வரவழைக்கின்றது. துன்பம் மற்றும் கஷ்டங்களிலிருந்து நமக்கு நிவாரணம் அளிக்கின்றது”.** (அஹமது)

ஆகவே, பொறுமை எனும் ஆடையை அணிந்து, ஆன்மாவை சுத்தம் செய்யுங்கள். ஐக்தாத்து வகையில் சற்று செல்வங்களை வழங்குங்கள். பொறுமை எனும் ஆற்றலால் ஆன்மீக வியாதிகளை நமக்கு வெல்ல முடியும். பொறுமையில்லை என்றால், இவ்வுலக ஆசைகளில் நாம் வீழ்ந்து விடுவோம். இந்த அருளுக்குரிய மாதத்தில் முன்பு நாம் தவறுகள் செய்திருந்தால் அவன் அதற்கு மன்னிப்பளிக்கட்டும்! அவன் நமக்கு உதவி புரியட்டும்! ஆமீன்.

## ANNOUNCEMENT & WARNING

### அறிவிப்பு மற்றும் எச்சரிக்கை

2018 மே மாதம் முதல் மயோட்டாவில் தொடர்ச்சியாக பூமி அதிர்ச்சி நிகழ்ந்து வருகின்றது. ஒரு நாளில்தான் பலமுறைகள்! 2018 மே 15 – ம் தேதி ரிச்சர் ஸ்கெயிலில் 5.8 பதிவு செய்யபட்டுள்ளது. இது, 2018 மே 24 – ம் தேதி வரையில் நீடித்தது. இந்நிகழ்வு மேலும் தொடர்ந்து வரும் என கலீ∴பத்துல்லாஹ் (அலை) அவர்கள் தெரிவித்தார். நிலநடுக்கம் மூலம், அதன் பிரதிபலித்தல் என்ற நிலையில் பல்வேறு பகுதிகளில் அது விளைவை ஏற்படுத்தியுள்ளது.



மௌரீஸியல் மற்றும் மயோட்டாவை சார்ந்த அஹமதியா முஸ்லீம்களின் காரியம் மிக கவலைக்குரியதாகும். அஹ்மதியத்தை ஏற்றுக் கொண்ட ஒரு மஹோரிஸ் மூலமாகவே மயோட்டாவில் அஹ்மதியத் நிறுவப்பட்டது என அவர்கள் M.T.A தொலைகாட்சி வழியாக பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர். மரோட்டாவை சார்ந்த ஒரு அஹமதியா மிஷ்ணரி தனது ஆட்களின் காரியங்களை கவனிக்காமல் மயோட்டாவில் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமில் குழப்பங்களை உண்டு செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார்.

1997 – ல் மயோட்டாவில் அஹமதியா ஜமா அத்தை நிறுவிய எனது முயற்சிகளை அவர்கள் அங்கீகரித்துக் கொள்ளவில்லை. அவர்கள், அவர்களுடையதல்லாத ஒரு பொருளின் மீது அதிகாரத்தை நிறுவ நினைக்கின்றனர். மேலும் அவர்கள் கூறுகின்றனர் 2015 – ல் தான் மயோட்டாவில் அஹ்மதியத் நிறுவபட்டது என! ஆனால் 20 வருடங்களுக்கு முன்பு அஹ்மதியத்தை ஏற்றுக் கொண்ட ஒரு அஹ்மதி குடும்பத்தை அவர்கள் சந்தித்தார்கள் என அவர்களின் ஒரு ரிப்போர்ட்டில் காணலாம். ஆனால் அக்குடும்பத்திற்கு அஹ்மதியத்தை ஏற்றுக் கொள்வதற்கான வழி வகுத்தது யார்? அதற்காக அயராத உழைப்பை மேற் கொண்டது யார்? அவர்களுக்கு அஹ்மதியத் எப்படி கிடைத்தது? ஏத்தகைய பொய்களை அவர்கள் தற்போது கூறுகின்றார்கள்.

இப்போதைய அமீா் மூலாதாஜீ, முன்னாள் அமீா் அமீனி ஜொவாகிா் மற்றும் அவா்களின் கலீ்.பாவை பின்பற்றி கொள்கின்ற பெரிய மிஷ்ணரியான உஸாம உமா் ஜோயி ஆகியோருக்கு ஒரு நேரடியான சவாலை நான் விடுக்கின்றேன். மௌரீஸியஸை சாா்ந்த அனைத்து அஹமதியா முஸ்லீம்களும் வருகை தரும் ஒரு மேடையில் வைத்து நோ்முகமாக ஒரு வாதத்திற்கு நான் தயராகயிருக்கின்றேன். ஏனெனில் அஹ்மதியத்தைச் சாா்ந்த பெரும்பாலான மக்களும் அவா்களின் தலைவா்கள் என்ன திட்டம் தீட்டுகின்றனா் என்பதை உணராமல் இருக்கின்றனா். அஹ்மதியா ஜமா அத்தை சாா்ந்த எல்லா மக்களும் உண்மையை உணரட்டும்! நீங்கள் விரும்பும் ஒரு பகுதியை தோ்வு செய்யுங்கள். உலகில் குழப்பங்களை உருவாக்கும் வகையில் ஏராளமான பொய்களை அவா்கள் பிரச்சாரம் செய்து வருகின்றனா். குறிப்பாக அஹ்மதிகளை தவறான நிலையில் அவா்கள் புரிய வைக்கின்றனா். அதாவது மௌரீஷியஸில் எந்த பிரச்சனையும் இல்லை என அவா்கள் மக்களை புரிய வைக்கின்றனா். ஆனால் உண்மை என்ன? உண்மையில் அவா்கள் புறக்கணிப்பை ஏற்படுத்துகின்றனா். பெரிய பெருநாள் தினத்தில் ஒரு பள்ளிவாயிலை மூடிக்கொண்டனா். சலாம் கூறக் கூடாது என அவா்கள் அஹ்மதிகளுக்கு கட்டளை விடுத்தனா். இரத்தபந்தங்களைக் கூட துண்டித்துக் கொள்ளுமாறு அவா்கள் கட்டளையிட்டனா். எல்லா வகையான சதி திட்டங்களையும் நடைமுறைப்படுத்திய அவா்கள் எனது ஊதியம்கூட வழங்கவில்லை. 10 – வருடங்களுக்கு மேலாகியும் இப்போதும் அவா்களின் முன்னால் இருக்கின்றேன். இக்காரியத்தில் ஒரு தீா்வை கண்டுகொள்ள அவா்களுக்கு முடியவில்லை. இன்று அவா்கள், தாங்கள் பாதிக்கப்பட்டவா்கள் என நினைக்கிறாா்கள். உண்மை இதுவாகும். முற்றிலும் பெரிய குழப்பங்களை விளைவிப்பவா்கள் இவா்கள் தான்.

அஹ்மதியா ஜமா அத் சா்வதேச மட்டத்தில் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்துள்ளது. ஆனால் இவ்வாறிருந்த போதிலும் மயோட்டியில் அவா்களுக்கு ஒரு துண்டு நிலத்தை கூட வாங்கவோ, அது வழியாக ஒரு சென்றா் (மையம்) ஆரம்பிக்கவோ, ஒரு மசூதியை கட்டவோ முடியவில்லை. அவா்கள் அங்கு அவா்களுக்கு தேவையில்லாத காரியங்களில் ஈடுபட்டுக் கொள்கின்றனா். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமில் குழப்பங்களை உருவாக்க முயலுகின்றனா். ஆம் நான் அவா்களிடம் கூறுகின்றேன். குழப்பங்களின் ஏஜெண்டுகளாக நீங்கள் பணி தொடரவும். அல்லாஹ் அவனது பணியை தொடா்ந்து கொள்வான். மயோட்டியில் நீங்கள் இன்னும் அதிக விப்பத்துகளுக்கு சாட்சியாகயிருப்பீா்கள். உங்கள் மீது இன்னும் அபாயங்கள் வந்தடையும். அதற்கு நீங்கள் ஆளாகிக் கொள்வீா்கள். நீங்கள் அங்கு இத்தகைய குழப்பங்களை உருவாக்குவதிலிருந்து விலகி கொள்ளாமல் இருந்தால்!

நீங்கள் உங்களின் வேலைகளை செய்யுங்கள். (வாக்களிக்கப்பட்ட மஸீஹின் (அலை) உண்மையைப் பற்றிய அறிவை மக்களுக்கு பகிர்ந்து கொள்ளுங்கள்) நீங்கள் மயோட்டியில் சென்றது, வாக்களிக்கப்பட்ட மஸீஹின் உண்மையை மக்களுக்கு எட்டவைப்பதற்கல்லவா? அதை ஏற்றுக் கொள்ளவைப்பதற்கல்லவா? நீங்கள் அமைதியுடன் அப்பணியில் மூழ்கியிருங்கள். நீங்கள் எதற்கு பிறருக்கு தீங்கு விளைவிக்கின்றீர்கள்? **"ஆக்கிரமிக்காரர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக! ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வின் நேர்வழியை விட்டு மனிதர்களை தடுத்து அதை கோணலாக்கவும் விரும்பினர். மேலும் அவர்கள் மறுமையையும் மறுத்தனர்".** (7:45,46)

இது உங்களுக்கு ஒரு முன்னெச்சரிக்கையாகும் (அதாவது மயோட்டியாவில் அஹ்மதியா மிஷ்ணரிக்கும் அன்னாருக்கு சேவை புரிவோர்களுக்கும்) இது, நான் உங்களுக்கு முன்னெச்சரிக்கை விடுக்கவில்லை என கூறாமலிருப்பதற்காகும். அல்லாஹ் அவனது வேலையை அவனே செய்து கொள்வான். அல்லாஹ்வையும் அவனது தூதரையும் அவர்கள் ஏளனம் செய்யக் கூடாது. அல்லாஹ்வின் கோபம் மிக கடினமாகும். ஹஸ்ரத் மிர்ஸாகுலாம் அஹமது (அலை) அவர்களின் உண்மையை உணர்ந்த, மயோட்டாவை சார்ந்த அஹமதிகள் மாஷா அல்லாஹ்! அல்ஹமதுலில்லாஹ்! நீங்கள் கவனமாகயிருங்கள். நற்செயல்களில் ஈடுபடுங்கள். நீங்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் நேர்மையான நம்பிக்கையாளர்களாகயிருங்கள். இன்ஷா அல்லாஹ்! நீங்கள் அவ்வாறு நேர்மையுடையவர்களாகயிருந்தால் அல்லாஹ் உங்கள் இதயங்களை நேர்வழியில் செலுத்துவான். நீங்கள் மெல்ல மெல்ல கலீ.ஃபத்துல்லாஹ்வை ஏற்றுக்கொள்வீர்கள். ஒரு சிறிய காலடி ஒரு பெரிய எதிர்காலத்திற்காக! இன்ஷா அல்லாஹ்!


மயோட்டாவை சார்ந்த எனது தோழர்களிடம் நான் கூறுகின்றேன். நீங்கள் கவலையடையாமலிருங்கள். நீங்கள் அஞ்சாமலிருங்கள். முஸ்லீம்கள் என சுயம் உரிமைகோரும் அவர்களின் மிரட்டல்களை கண்டு! நீங்கள் அமைதியுடன் உங்களின் செயல்களில் ஈடுபடுங்கள். இன்ஷா அல்லாஹ்! அல்லாஹ் அவனது வேலையை செய்துக் கொள்வான். நீங்கள் பொறுமையை கையாளுங்கள். நீங்கள் மிக சிறந்த வெகுமதிகள் பெற்று விடுவீர்கள். இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.



**Translated by:**

*Azim Ahmad*


**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 7339689239, 9789180817
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com


**Issued by:**


**R. Jamaluddin Raother**
**Amir - Kerala South Zone, India**
**Jamaat Ul Sahih Al Islam**
**Email:** jamal.raother@gmail.com
**Phone:** 9447001832, 04752252663
**Blog:** www.sahih-al-islam.blogspot.in